# காளப்பட்டி பேரூராட்சி
# கோவை மாவட்டம்
## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 1590/2010/அ நாள். 02.12.2010

காளப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் 2010–2011–ம் ஆண்டிற்கு பொதுநிதியின் கீழ் வேலைகளை செய்து முடிக்க இந்த பேரூராட்சியில் பதிவு செய்துள்ள ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் செயல்அலுவலர் அவர்களால் 21.12.2010–ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் உரிய டேவணித்தொகையினை செலுத்தி, ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்துக் கொடுக்க வேண்டும். டெண்டர்கள் 21.12.2010 அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரித்து முடிவுகள் அறிவிக்கப்படும். டெண்டர் ஷெட்யூல் படிவங்கள் 20.12.2010தேதியன்று மாலை 3.00 மணிவரை தொகையினை செலுத்தி ஷெட்யூல்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஊர்ஜிதம் செய்வது பேரூராட்சி மன்றத்தின் முடிவே இறுதியானது ஆகும். இதர விவரங்கள் அலுவலக நாட்களில் வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை 1% | பிணை வைப்புத் தொகை 1% | டெண்டர் ஷெட்யூல் படிவ விலை ரூபாயில் | வேலை செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| | **பொதுநிதி வேலைகள் 2010–11** | | | | | |
| 1 | வார்டு எண் 5. வீரியம்பாளையம் மெயின் ரோடு அகலப்படுத்தி சாலையை மேம்பாடு செய்தல் | 11.40 | 11400 | 11400 | 3120 | வேலை உத்திரவு வழங்கிய தேதியிலிருந்து 60 நாட்கள் |
| 2 | வார்டு எண் 2, சேவூர் ரோடு 0/0 முதல் 1/00 வரை தார்சாலை அமைத்தல் | 19.90 | 19900 | 19900 | 3120 | |
| 3 | வார்டு எண் 2, சேவூர் ரோடு 1/00 முதல் 2/00 வரை தார்சாலை அமைத்தல் | 19.90 | 19900 | 19900 | 3120 | |
| 4 | வார்டு எண் 2, சேவூர் ரோடு 2/00 முதல் 2/950 வரை தார்சாலை அமைத்தல் | 19.00 | 19000 | 19000 | 3120 | |
| 5 | வார்டு எண் 14, எல்.என் நகர் , டாக்டர் என்.ஜி.பி. காலேஜ் முதல் சத்தி நகர் வரை தார்சாலை அமைத்தல் | 19.95 | 19950 | 19950 | 3120 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | வார்டு எண் 14, எல்.என் நகர் , டாக்டர் என்.ஜி.பி. காலேஜ் முதல் இரா. மோகன் ரோடு வரை தார்சாலை அமைத்தல் | 19.90 | 19900 | 19900 | 3120 | வேலை உத்திரவு வழங்கிய தேதியிலிருந்து 60 நாட்கள் |
| 7 | வார்டு எண் 14, எல்.என் நகர் காளப்பட்டி சித்ரா மெயின் ரோடு முதல் இரா. மோகன் ரோடு வரை சாலையை மேம்படுத்தி தார்சாலை அமைத்தல் | 15.50 | 15500 | 15500 | 3120 | |
| 8 | வார்டு எண் 14, காளப்பட்டி சித்ரா மெயின் ரோடு முதல் பாஸ்கரன் கம்பெனி வரை தார்சாலை அமைத்தல் | 14.00 | 14000 | 14000 | 3120 | |
| 9 | வார்டு எண் 7, வீரியம்பாளையம் மெயின் ரோட்டில் இளங்கோ நகர் முதல் கருப்பராயன் பாளையம் ரோடு வரை தார்சாலையை மேம்படுத்துதல் | 6.10 | 6100 | 6100 | 1560 | |
| 10 | வார்டு எண் 7, கருப்பராயன் பாளையம் பிரதான தார் சாலையை மேம்படுத்துதல் | 6.40 | 6400 | 6400 | 1560 | |
| 11 | வார்டு எண் 14, ராகவேந்திரா அவின்யூ பகுதியில் தார்சாலை அமைத்தல் | 8.00 | 8000 | 8000 | 1560 | |
| 12 | வார்டு எண் 7, கருப்பராயன் பாளையம் மெயின் விதியில் வடிகால் கட்டுதல் | 0.75 | 750 | 750 | 1560 | |

## நிபந்தனைகள்

1) மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணைய தளங்களில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம்.
   இணையதள முகவரி : 1.www.tenders.tn.gov.in, 2.http://www.tn.gov.in/dtp
   3.http://townpanchayats.tn.gov.in/tender

2) ஒப்பந்தப்புள்ளிக்கான டேவணித்தொகையினை செலுத்தி அசல் ரசீதினை இணைத்து மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வரிசை எண். பணியின் விவரம் தனித்தனியாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

3) ஒப்பந்தப்புள்ளிகளை தள்ளிவைக்கவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. வேலைகள் கிடைக்கப்பெறாத ஒப்பந்ததாரர்களுக்கு பேரூராட்சி மன்ற ஒப்புதலுக்குப் பிறகு டேவணித்தொகை திருப்பி வழங்கப்படும்.

4) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டதாகும்.

5) ஒப்பந்தப்புள்ளிகள் சதவிகிதம் விதிகளுக்கு குறைவாக அளிக்கப்பட்டிருந்தால் உரிய கூடுதல் டேவணித் தொகையை செலுத்திய பின்னரே பணிக்கான உத்திரவு வழங்கப்படும்.

6) வேலை உத்தரவு கிடைக்கப்பெற்றதும் ஒப்பந்ததாரர் ரூ.50/–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்பத்திரம் செயல் அலுவலருக்கு எழுதி தாக்கல் செய்ய வேண்டும்.

7) வேலை உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் உத்திரவில் குறிப்பிட்டுள்ள நாட்களுக்குள் பணிமுடித்து அறிக்கை அனுப்புதல் வேண்டும்.

8) வேலை துவங்கும்பொழுதும், வேலை நடைபெற்றிருக்கும் பொழுதும், பணி முடிவடைந்த நிலையிலும் புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

9) வேலை நடக்கும் இடத்தில் வேலைகள் குறித்த விபரம் அடங்கிய பெயர் பலகை அமைப்படவேண்டும்.

10) பணிகள் உரிய காலத்தில் செய்து முடிப்படவேண்டும். செயல்அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு பணிகள் செய்யப்படவேண்டும்.

11) வேலைகளுக்கு பயன்படுத்தப்படும் கட்டுமானப்பொருட்கள் அனைத்திற்கும் இனம் வாரியாக தரச்சான்று ஒப்பந்ததாரர் செலவிலேயே பெற்று இணைக்கப்படவேண்டும்.

12) கட்டுமானப்பணிக்கு சிமெண்ட் மற்றும் இரும்பு கம்பிகள் துறை மூலம் வழங்கப்பட மாட்டாது.

13) வேலையை அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தாரர் வேறுயாருக்கும் ஒப்பந்தம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்தது தெரிய வந்தால் அவ்வேலைக்கான உத்திரவு ரத்து செய்வதுடன் அதனால் ஏற்படும் இழப்புகளை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும்.

14) நடைபெறும் பணியின் மதிப்பில் வருமானவரி 2%, மேல்வரி 10%, கல்வி வரி 0.04%, VAT 2% மற்றும் 0.3 சதவிகிதம் கட்டுமானத் தொழிலாளர்கள் நல நிதியும் பிடித்தம் செய்து உரிய தலைப்பில் செலுத்தப்படும்.

15) கூடுதல் விபரம் அறிய விரும்புவோர் அலுவலக வேலை நாட்களில் அலுவலக வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

**காளப்பட்டி பேரூராட்சி**
**நாள் 0212.2010**

**செயல்அலுவலர்**
**காளப்பட்டி பேரூராட்சி,**
**காளப்பட்டி, கோவை-4**

**பெறுதல்**

பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் அனைவருக்கும்

**நகல் :**

1. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,கோவை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
2. தலைவர்,காளப்பட்டி பேரூராட்சி
3. செயல்அலுவலர், பேரூராட்சிகள், சர்க்கார் சாமக்குளம், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, வெள்ளக்கிணறு மற்றும் இடிகரை
4. உதவிசெயற்பொறியாளர், கோவை
5. உதவிப்பொறியாளர், சரவணம்பட்டி
6. பணி ஆய்வாளர், காளப்பட்டி பேரூராட்சி
7. அலுவலக விளம்பரப்பலகை மற்றும் செயல்அலுவலரின் மேஜைக்கு